பவை போதாது. ஆகவே, கன்வெர்ட் செய்வது என்பது இயலாது. பெரிய மருத்துவ மனைகளுக்கு 4, 5 என்ற அளவில் ஆம்புலன்ஸ் வான்கள் வாங்கவேண்டுமென்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பே ஆலோசனை வழங்கப்பட்டது. வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆம்புலன்ஸ் வான்கள் எல்லா மாவட்ட மருத்துவ மனைகளுக்கும் கிடைக்கச் செய்யத் திட்டம் இருப்பதால், அதற்குப் பின்னால் யோசிக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Not only in General Hospital but also in the Royapettah Hospital, there is absolute lack of mortuary vans and because of this, corpses have to wait for hours together or even for a day. Will the Government give topmost priority for purchase of at least two or three mortuary vans for each of the three hospitals in Madras City, viz., Royapettah, General and Royapuram hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மருத்துவ மனைகளில் வருகிறவர்களில் பெரும்பாலோர் நல்ல சிகிச்சை பெற்றுத் திரும்புகிறார்கள். ஆகவே, ஒரு மருத்துவமனைக்கு இரண்டு வான் தேவை என்ற நிலைமை ஏற்படாது. ஒரு வண்டியாவது ஓடக்கூடிய நிலையில் இருக்கும்படி கவனிக்கப்படும்.

மேல்விஷாரத்தில் கோஷா பெண்களுக்கான மருத்துவமனை

* 420 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை தொகுதி மேல்விஷாரத்தில் கோஷா பெண்கள் ஆஸ்பத்திரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, ராணிப்பேட்டை, மேல்விஷாரம் போன்ற இடங்களிலுள்ள பெண்கள் வேலூருக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு தனி மருத்துவமனையை ஏற்படுத்த வசதி இல்லை என்றாலும், இருக்கின்ற மருத்துவ மனையை விரிவுபடுத்தி கோஷா பெண்களுக்கு என்று ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இல்லை என்று பதில் சொன்னேன். மேல்விஷாரத்தில் ஏற்கெனவே இருந்த மருத்துவ மனையை அரசு கடந்த ஆண்டு எடுத்துக் கொண்டது. அதை எடுப்பதற்கு முன் ஒரு லட்சம் ரூபாய் அரசுக்கு நன்கொடை தருவதாக வாக்களித்திருந்தார்கள்; இன்னும் தரவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் அந்தத் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த வாய்ப்பு ஆகும்.

தானிப்பாடி மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம்

*421 **வினா—திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்தில் அரசினர் மருத்துவ மனைக்கென புதிதாகக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) தானிப்பாடி கிராமத்தில் ரூ. 4,60,000 செலவில் 16 படுக்கைகள் கொண்ட புதிய அரசினர் மருத்துவமனையும், வெளிநோயாளிப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, சமையலறை, சவப்பிரிவு முதலியவைகளையும் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன்: தலைவரவர்களே, அடுத்தாண்டிலாவது இந்தக் கட்டடம் நிறைவு பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்போதே கட்டட வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவிலே கட்டி முடிக்கப்படும்.

சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி

*422 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கென தமிழ்நாடு அரசு மத்திய அரசினரிடம் "சிறப்பு நிதி" ஏதேனும் கோரியுள்ளதா?